In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

| | |
|---|---|
| S.C.No.11/2021 | Prosecution witness P.W.8 |
| Name: Ramar | Calling: |
| Father Name: | Religion: |
| Village: | Caste: |
| Taluk: | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 28.08.2023
**(Accused is present. )**
முதல் விசாரணை :-

நான் தற்போது முத்துலாபுரத்தில் வசிக்கிறேன். கூலி வேலை செய்கிறேன். எனக்கு கிருஷ்ணமூர்த்தி, அழகர்சாமி, அலெக்ஸ் மற்றும் சந்தனம்மாள் என்று நான்கு மக்கள். அனைவருக்கும் திருமணம் நடைபெற்றுவிட்டது. ஆஜர் எதிரியை தெரியும். உள்ளூர்க்காரர். 17.05.2020 ம் தேதி ஞாயிற்றுக்கிழமை மதியம் 2.30 மணியளவில் என் மகன் அழகர்சாமி பைக்கில் வத்தலக்குண்டில் இருந்து எங்கள் ஊருக்குள் வந்து கொண்டிருந்தார். அப்போது சங்கிலியை ஓட்டி என் மகன் அழகர்சாமி வண்டியை ஓட்டிச் சென்றதால் சங்கிலி என் மகனை பார்த்து ஏன் வேகமாக வருகிறாய் என்று கொம்மா, கோத்தா என்று கூறி அசிங்கமாக பேசினார். என் மகன் அழகர்சாமி வீட்டிற்கு வந்து நடந்த விவரத்தை எங்களிடம் சொன்னார். உடனே நாங்கள் அனைவரும் அதுபற்றி கேட்பதற்காக சங்கிலி வீட்டிற்கு சென்றோம். நான், அழகர்சாமி, கிருஷ்ணமூர்த்தி, அலெக்ஸ், என் மருமகள்கள் பூபதி, கற்பகம் சென்று என் மகன் கிருஷ்ணமூர்த்தி ஏன் தரக்குறைவாக என் அம்மாவை பற்றி பேசினாய் என சங்கிலியை பார்த்து கேட்டான். அப்படித்தான் பேசுவேன் என சொல்லி சங்கிலி வீட்டிற்குள் சென்று கத்தியை எடுத்துவந்து என் மகன் கிருஷ்ணமூர்த்தியின் இடது பக்க மார்பில் இரண்டு குத்து குத்திவிட்டான். என் மகன் மயங்கி விழுந்து

விட்டான். சாபொ1 கத்தியை காட்டி இந்த கத்தியால் குத்தினாரா என கேட்டபோது இது இல்லை என்றும் அது 4 இஞ்ச் கத்தி என சாட்சி சொல்கிறார். என் மகனை அலெக்சும், வினோத்தும் பைக்கில் கிருஷ்ணமூர்த்தியை ஏற்றிக்கொண்டு வத்தலக்குண்டு அரசு மருத்துவமனைக்கு போனார்கள். அங்கு கொண்டு சேர்ப்பதற்கு முன்னரே என் மகன் இறந்துவிட்டதாகச் சொன்னார்கள். பின்னர் மருத்துவமனையிலிருந்து நானும் என் மருமகள் கற்பகமும் மருத்துவமனையில் இருந்து பஸ் ஏறி பட்டிவீரன்பட்டி காவல் நிலையம் சென்று கற்பகம் புகார் கொடுத்தார். அதில் நான் சாட்சி கையெழுத்து போட்டேன். என்னிடம் காண்பிக்கப்படும் சாட்சிக்கையெழுத்து என்னுடையதுதான். அது அதசாஆ.2. இந்த வழக்கு சம்மந்தமாக மறுநாள் 18.05.2020 ம் தேதி மருத்துவமனையில் வைத்து என்னை போலீசார் விசாரித்தார்கள். நான் கையெழுத்து போட்டேன்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :- இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2023.08.28 17:55:47 +0530

Principal District Judge,
Dindigul.